ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

இரண்டாம்பத்து

_______________

5-ஆம் திருமொழி - பின்னைமணாளனை

_______*________

* பின்னைமணாளனைப் பேரில்கிடந்தானை *
முன்னையமரர் முதல்தனிவித்தினை *
என்னையும்எங்கள் குடிமுழுதுஆட்கொண்ட *
மன்னைவந்துகுழல்வாராய் ! அக்காக்காய்!
மாதவந்தன்குழல்வாராய்அக்காக்காய்! (1)

பேயின்முலையுண்ட பிண்ணைஇவன்முன்னம் *
மாய்ச்சகடும் மருதும்இறுத்தவன் *
காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல் *
தூய்தாகவந்துகுழல்வாராய்அக்காக்காய்!
தூமணிவண்ணன்குழல்வாராய்அக்காக்காய்! (2)

திண்ணக்கலத்தில் திரையுறிமேல்வைத்த *
வெண்ணெய்விழுங்கி @ விரையஉறங்கிடும் *
அண்ணல் அமரர்பெருமானை * ஆயர்தம்
கண்ணனைவந்துகுழல்வாராய்அக்காக்காய்!
கார்முகில்வண்ணன்குழல்வாராய்அக்காக்காய்! (3)

பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு *
கள்ளவகரன் வருவானைத்தான்கண்டு *
புள்ளிதுவென்று பொதுக்கோவாய்கீண்டிட்ட *
பிண்ணையைவந்துகுழல்வாராய்அக்காக்காய்!
பேய்முலையுண்டான்குழல்வாராய்அக்காக்காய்! (4)

கற்றினம்மேய்த்துக் கனிக்குஒருகறினை *
பற்றியெறிந்த பரமந்திருமுடி *
உற்றன்பேசி நீஓடித்திரியாதே *
அற்றைக்கும்வந்துகுழல்வாராய்அக்காக்காய்!
ஆழியான்தன்குழல்வாராய்அக்காக்காய்! (5)

கிழக்கில்குடிமன்னர் கேடிலாதாரை *
அழிப்பார்நினைந்திட்டு அவ்வாழியதனால் *

விழிக்குமளவிலே வேரறுத்தானை *
குழற்குஅணியாகக்குழல்வாராய்அக்காக்காய்!
கோவிந்தந்தன்குழல்வாராய்அக்காக்காய்! (6)

பிண்டத்திரளையும் பேய்க்குஇட்டநீர்ச்சோறும் *
உண்டற்குவேண்டி நீஓடித்திரியாதே *
அண்டத்துஅமரர் பெருமான்அழகமர் *
வண்டொத்திருண்டகுழல்வாராய்அக்காக்காய்!
மாயவந்தன்குழல்வாராய்அக்காக்காய்! (7)

உந்தியெழுந்த உருவமலர்தன்னில் *
சந்தச்சதுமுகந்தன்னைப் படைத்தவன் *
# கோந்தக்குழலைக் குறந்துபுளியட்டி *
தந்தத்தின்சீப்பால்குழல்வாராய்அக்காக்காய்!
தாமோதரந்தன்குழல்வாராய்அக்காக்காய்! (8)

மன்னந்தன்தேவிமார் கண்டுமகிழ்வெய்த *
முன்இவ்வுலகினை முற்றும்அளந்தவன் *
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்து *
பின்னேடிருந்துகுழல்வாராய்அக்காக்காய்!
பேராயிரத்தான்குழல்வாராய்அக்காக்காய்! (9)

* கண்டார்பழியாமே அக்காக்காய்! * கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றஆய்ச்சிசொல் *
விண்தோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல் *
கொண்டாடிப்பாடக் குறுகாவினை $ தானே. (10)

அடிவரவு : பின்னை பேய் திண்ணம் பள்ளத்தில் கற்றினம் கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி

அக்காக்காய்-சிறுபிள்ளைகளைக் குழல்வாருவார் சீராட்டாகச் சொல்லும் பாசுரம் @ விரையன் என்றும் பாடம்
# கொந்தம்-நெறிப்பு $ தாமே என்பதும் பாடம்